DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.
CC. No. 76 of 2021
Prosecution witness : LW- 6/PW-4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்துக்குமார் | Caste | : | |
| Fathers Name | : | பாலன் | Calling | : | |
| Village | : | சோழவரம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 49 |

(Accused called present.)
solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.10.2024 .

முதல் விசாரணை நேரம் பகல் 12.45

1. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஊராட்சி செயலராக பணி புரிந்து வருகின்றேன்.

2. கடந்த 02.05.2018ம் தேதியன்று ஜான் வெஸ்லி மற்றும் சுரேந்தர், ஜெயபிரகாஷ் ஆகியோர்கள் இரு சக்கரவாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார்கள் அப்போது அவர்களுக்கு முன்னால் வந்த வாகனம் இடித்துவிட்டது என்று கூறினார்கள். அந்த விபத்து நடந்த உடன் இரு சக்கர வாகனத்தை இயக்கிய ஜான் வெஸ்லி என்பவர் சம்பவயிடத்திலே இறந்துவிட்டார் என்றும் மற்ற இரண்டு நபர்களை 108 ஆம்புளன்ஸ் மூலம் சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே சுரேந்தர் என்பவர் வரும் வழியிலே இறந்துவிட்டார் என்று எனக்கு தொலைபேசி மூலமாக தகவல் சொன்னார்கள் நான் மருத்துவமனைக்கு சென்றேன்.

3. மேற்படி சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணைச்செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

4. இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்ற விவரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான்.

5. இருசக்கரவாகனத்தில் சென்ற 3 நபர்களில் யாருக்காவது ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை.

6. விபத்தில் இறந்து போனதாக சொல்லப்படும் இயக்கிய வாகனம் யாருக்கு சொந்தமானது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

7. 3 நபர்களும் 18 வயது இருக்குமா என்றால் எனது மகனுக்கு மட்டும் தான் 18 வயது இருக்கும்.

8. இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் எதாவது புகார் அளிததீர்களா என்றால் இல்லை.

9. இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு தகுதியில்லாத நபர்கள் ஓட்டியதால் இந்த விபத்து ஏற்படுத்திருக்கலாம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

10. இவ்விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றாலும் வாகனவிபத்தில் காயமுற்ற நபர் எனது மகன் என்பதால் வாகன விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சயம் முடிவுற்ற நேரம் பகல் 1.00

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.
CC. No. 76 of 2021
Prosecution witness : LW- 5/PW-7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகன் | Caste | : | |
| Fathers Name | : | கோபால் | Calling | : | |
| Village | : | கோட்டை மேடு, சேழவரம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 62 |

(Accused called present.)
solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.10.2024 .

முதல் விசாரணை நேரம் பகல் 1.00

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ரயில்வே துறையில் பணி புரிந்தேன்

2. நான் வீட்டில் இருந்த போது எனது பேரனுக்கு அடிப்பட்டுவிட்டது என்றும் அவர் 108 வாகனம் மூலமாக மருத்துவமனை கொண்டு வரும் போது இறந்துவிட்டார் என்று கூறினார்கள் ஆகையால் நான் மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

3. இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்ற விவரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான்.

4. இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு தகுதியில்லாத நபர்கள் ஓட்டியதால் இந்த விபத்து ஏற்படுத்திருக்கலாம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. இவ்விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றாலும் வாகனவிபத்தில் காயமுற்ற நபர் எனது பேரன் என்பதால் வாகன விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சயம் முடிவுற்ற நேரம் பகல் 1.05